**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 476**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
பத்தாவது பாராளுமன்றம்
(முதலாவது கூட்டத்தொடர்)

# அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பதினேழாவது அறிக்கை

(2025.11.19ஆந் திகதி மற்றும் 2025.11.26ஆந் திகதி
தேசிய சேமிப்பு வங்கி தொடர்பில்
மேற்கொள்ளப்பட்ட விசாரணை)

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்
பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர அவர்களால்
2026ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19ஆந் திகதி ஆற்றுப்படுத்தப்பட்டது.

2026ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19ஆந் திகதி அச்சிடப்பட வேண்டும் என்று
பாராளுமன்றத்தால் கட்டளையிடப்பட்டது.

**<u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கட்டமைப்பு</u>**

1. கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர, பா.உ., (தவிசாளர்)
2. கௌரவ அர்கம் இல்யாஸ், பா.உ., (2025.05.08ஆந் திகதி முதல்)
3. கௌரவ மனோ கணேசன், பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
4. கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேகர. பா.உ., (2025.05.20ஆந் திகதி முதல்)
5. கௌரவ (சட்டத்தரணி) அர்ஜுன சுஜீவ சேனசிங்க. பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
6. கௌரவ. டி.வி. சானக, பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
7. கௌரவ (சட்டத்தரளி) அநுராத ஜயரத்ன, பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
8. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
9. கௌரவ. எஸ்.எம். மரிக்கார், பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
10. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ., (2025.05.20ஆந் திகதி முதல்)
11. கௌரவ சமிந்த விஜேசிறி, பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
12. கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ., (2025.05.08ஆந் திகதி முதல்)
13. கௌரவ எம்.கே.எம் அஸ்லம், பா.உ.,
14. கௌரவ (சட்டத்தரணி) நிலந்தி கொட்டஹச்சி, பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
15. கௌரவ சமன்மலீ குணசிங்க, பா.உ.,
16. கௌரவ திலித் ஜயவீர, பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
17. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ, (2025.05.08ஆந் திகதி முதல்)
18. கௌரவ சுஜீவ திஸாநாயக்க, பா.உ.,
19. கௌரவ சுதத் பலகல்ல பா.உ.,
20. கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, பா.உ.,
21. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வு பெற்ற) பிரகீத் மதுரங்க பா.உ, (2025.03.21ஆந் திகதி முதல்)
22. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.,
23. கௌரவ ருவன் மாபலகம, பா.உ.,
24. கௌரவ சுனில் றாஜபக்ஷ, பா.உ.,
25. கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ, பா.உ.,
26. கௌரவ அசித நிரோஷண எகொட விதான, பா. உ.,
27. கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம், பா.உ., (2025.03.21ஆந் திகதி முதல்)
28. கௌரவ திலிண சமரகோன், பா.உ.,
29. கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி, பா.உ.,
30. கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்தர பா. உ.,
31. கௌரவ தினேஷ் ஹேமந்த, பா. உ., (2025.03.21ஆந் திகதி முதல்)

## குழுவின் ஆலோசகர்கள்

- ❖ ஆலோசகர், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு } திரு. சரத் மாயாதுன்ன
- ❖ ஆலோசகர், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு } திரு. பியசேன ரணசிங்ஹ

## குழு அலுவலகத்தின் பணியாட்டொகுதியினர்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தற்போதைய பணியாட்டொகுதியினர் பின்வருமாறு

| | |
|---|---|
| ❖ பிரதான அலுவலர் | திருமதி. ரூபானி டி சொய்சா |
| ❖ பிரதிப் பிரதான அலுவலர் | திரு. எஸ். எல். விக்ரம |
| ❖ பாராளுமன்ற அலுவலர் | திருமதி. ஜி.வி.எஸ்.கே. குமாரி |
| ❖ பாராளுமன்ற அலுவலர் | திருமதி. ஐ.எஸ். கோமஸ் |
| ❖ பாராளுமன்ற அலுவலர் | திருமதி. ஜீ.எல்.டி. பிரனாந்து |
| ❖ பாராளுமன்ற அலுவலர் | செல்வி. எம்.என்.பி. பெரேரா |

## குழு அறிக்கைகள்

www.parliament.lk என்ற இணையத் தளத்தில் பின்வரும் வழியில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையைத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற நடவடிக்கைகள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | தவிசாளரின் குறிப்புக்கள் | iv |
| 2. | நிறைவேற்றுச் சாராம்சம் | v |
| 3. | பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கப் பொறுப்பு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பதினேழாவது அறிக்கை | vi |
| 4. | நிதியறிக்கைகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் | 1 |
| 5. | அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்ட நிறுவனம் – தேசிய சேமிப்பு வங்கி | 2 |

## தவிசாளரின் குறிப்புக்கள்

பாராளுமன்ற சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்களில் ஒன்றாக தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் 2025.11.19 மற்றும் 2025.11.26 ஆம் திகதிகளில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சின் கீழ் வருகின்ற தேசிய சேமிப்பு வங்கியின் 2022, 2023ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கையை இத்துடன் ஆற்றுப்படுத்துகிறேன்.

தேசிய சேமிப்பு வங்கி 1971ஆம் ஆண்டு 30ஆம் இலக்க சட்டத்தின் மூலம் அனுமதிப்பத்திரம் பெற்ற வங்கியாக தாபிக்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கம், பணியாட்டொகுதி, செயலாற்றுகை மற்றும் கடன் தொகுப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் குழுவின் அவதானம் செலுத்தப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கியின் பணியாட்டொகுதிக்குரிய உத்தியோகத்தர்கள் குழுவொன்று ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறித்தும், அந்தக் குழுவினுள் பொது முகாமையாளர், பிரதம நிதி அதிகாரி மற்றும் பிரதம தகவல் அதிகாரி உட்பட மேலும் பல நிறைவேற்றுத் தரப் பதவிகள் உள்ளடங்கியுள்ளமை குறித்தும் அவதானம் செலுத்திய குழு, வங்கியின் பணியாட்டொகுதிக்காக பொருத்தமான பதிலீட்டுத் திட்டமொன்றையும், மனிதவளத் திட்டமொன்றையும் தயாரிப்பதன் தேவைப்பாடு குறித்துக் கலந்துரையாடியது. அத்துடன், வங்கியின் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் நிரந்தர பணியாட்டொகுதியை ஆண்டுதோறும் திருத்தம் செய்யாமல் பேணுவதன் முக்கியத்துவம் குறித்தும், மையப்படுத்தப்பட்ட வங்கி முறைமையினை நிறுவி, தொழில்நுட்பப் பிரச்சினைகளைக் குறைத்து அந்த முறைமையினைப் பேணிச் செல்வதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

கடன் தொகுப்புப் பகுப்பாய்வினை மேற்கொள்ளும் போது, வங்கியினால் வழங்கப்பட்டுள்ள பிரதான நிறுவனக் கடனான RPI Private Limited எனும் மாலைதீவு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள 9 மில்லியன் அமெரிக்க டொலர் கூட்டுக் கடனை மீள அறவிடுவது தொடர்பாக வங்கி செயற்பட்டுள்ள விதம் குறித்து கவனம் செலுத்திய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, இதன்போது வங்கியின் சட்டப் பிரிவின் செயற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தியது. இந்த மாலைத்தீவு நிறுவனம் தொடர்பான தகவல்கள், கடன் வழங்கும் நடைமுறை மற்றும் கடன் வழங்கும் போது அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் குறித்து விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும், நிதி ஒழுங்குவிதி 104இன் படி நிரல் அமைச்சினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் விதந்துரைகள் வழங்கப்பட்டன. மேலும், பிம்புத் பினான்ஸ் பிஎல்சி (Bimputh Finance PLC) மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு (KDU) வழங்கப்பட்டுள்ள கடன்களை அறவிடுவதற்கு வங்கியினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, அக்குழுவின் அங்கத்தவர்களான கௌரவ உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும், சபாநாயகர் உள்ளிட்ட பாராளுமன்றப் பணியாட்டொகுதியினர், இரு ஆலோசகர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும், திறைசேறி அலுவலர்கள், தேசிய கணக்காய்வு அலுவலகம் என்பவற்றிலிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

**டாக்டர். நிஷாந்த சமரவீர,**

**தவிசாளர்,**

**அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு**

## நிறைவேற்றுச் சாராம்சம்

2025.11.19 மற்றும் 2025.11.26 ஆகிய திகதிகளில் பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால், தேசிய சேமிப்பு வங்கியின் 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை குறித்து விடயங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், இதன்போது பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

- தேசிய சேமிப்பு வங்கியின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்
- பணப்பாளர் சபையின் கட்டமைப்பு
- ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தல்
- வங்கியின் பணியாட்டொகுதிக்குப் பொருத்தமான ஒரு பதிலீட்டுத் திட்டத்தையும், மனிதவளத் திட்டத்தையும் தயாரித்தல்
- ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான சிக்கல்கள்
- மையப்படுத்தப்பட்ட வங்கி முறைமையினை நிறுவி, தொழில்நுட்பப் பிரச்சினைகளைக் குறைத்து அந்த முறைமையினைப் பராமரித்தல்
- வங்கியின் செயலாற்றுகை மற்றும் விகிதாசாரப் பகுப்பாய்வு
- கடன் தொகுப்புப் பகுப்பாய்வினை மேற்கொள்ளல் மற்றும் செயலற்ற கடன்களை அறவிடுதல்
- RPI Private Limited எனும் மாலைத்தீவு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடனை மீள அறவிடுதல்
- பிம்புத் பினான்ஸ் பிஎல்சி (Bimputh Finance PLC) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொடர்பாகப் பரிசீலித்தல்
- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு (KDU) வழங்கப்பட்டுள்ள கடன்கள்
- ஏனைய நிறுவனக் கடன்கள் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் தொடர்பான தகவல்கள்
- வங்கியின் காணாமல் போன கடன் கோப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பதினேழாவது அறிக்கை**

குழு பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் 2025.11.26ஆந் திகதி வரை பின்வரும் நிறுவனங்கள் விசாரிக்கப்பட்டன.

| தொடர் இலக்கம் | அழைக்கப்பட்ட நிறுவனம் | குழு கூடிய திகதி |
|---|---|---|
| 1. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2025.02.18 |
| 2. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2025.02.20 |
| 3. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 2025.02.27 |
| 4. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை | 2025.03.05 |
| 5. | தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை | 2025.03.12/<br>2025.03.26 |
| 6. | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை | 2025.03.27 |
| 7. | விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (தனியார்) கம்பெனி | 2025.04.02 |
| 8. | காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2025.05.08 |
| 9. | விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் கம்பனி (தனி) | 2025.05.09 |
| 10. | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | 2025.05.15 |
| 11. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம். | 2025.05.23 |
| 12. | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 2025.06.04 |
| 13. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 2025.06.20 |
| 14. | மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2025.07.09 |
| 15. | காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2025.07.17 |
| 16. | அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் | 2025.07.23 |
| 17. | சிவில் விமான சேவைகள் அதிகார சபை | 2025.08.20 |
| 18. | இலங்கை துறைமுக அதிகாரசபை | 2025.09.10 |
| 19. | புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் | 2025.09.12 |
| 20. | இலங்கை மின்சார சபை | 2025.09.24 |
| 21. | நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை | 2025.10.08 |
| 22. | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் | 2025.10.10 |
| 23. | இலங்கை மின்சார சபையின் விசாரணையுடன் தொடர்புடையதாக எல்.ரீ.எல்.ஹோல்டிங்ஸ் | 2025.10.24 |

| | | |
|---|---|---|
| | கம்பனி மற்றும் அதனால் நிர்வகிக்கப்படும் கம்பனிகள் | |
| 24. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.19 |
| 25. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.26 |

தற்போது, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற, அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திட்ட திணைக்களம் ஆகியவற்றின் கீழ் ஒழுங்குறுத்தப்படும் 462 அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் காணப்படுகின்றன. (மூலாதாரம்: அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் - 2025.09.04ஆந் திகதி வரை)

அவற்றில், 2025.11.19 மற்றும் 2025.11.26 ஆம் திகதிகளில் குழுவினால் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் வருகின்ற தேசிய சேமிப்பு வங்கியின் 2022, 2023ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை என்பன பரிசீலிக்கப்பட்டு, குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

தேசிய சேமிப்பு வங்கியினால் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி அறிக்கைகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயம் கீழே தரப்பட்டுள்ளது.

| நிறுவனம் | வருடம் | |
|---|---|---|
| | 2022 | 2023 |
| தேசிய சேமிப்பு வங்கி | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியற்ற அபிப்பிராயம் |

**கணக்காய்வு அபிப்பிராய வகைகள்**

1. முனைப்பழியற்ற அபிப்பிராயம் (Unqualified Opinion)

   நிதியறிக்கையில் நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமான முறையில் முன்வைக்கப்பட்டுள்ளமை

2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (Qualified Opinion)

   அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப மெய்யாகவும், நியாயமாகவும் பிரதிபலிக்கின்றமை

3. அபிப்பிராயத் துறப்பு (Disclaimer of Opinion)

   போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை இனங்காண முடியாததால் கணக்குகள் தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க முடியாமை

4. எதிர்மறை அபிப்பிராயம் (Adverse Opinion)

   நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குட்பட்டு மெய்யாகவும், நியாயமாகவும் பிரதிபலிக்காமை

**<u>தேசிய சேமிப்பு வங்கி</u>**

**(நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு)**

**பரிசீலிக்கப்பட்ட திகதிகள் - 2025.11.19 மற்றும் 2025.11.26**

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**

1. <u>வங்கியின் தனித்துவமான பண்புகள்</u>

தேசிய சேமிப்பு வங்கியின் தனித்துவம் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின்படி, தேசிய சேமிப்பு வங்கியானது ஒரு அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கியாகும் .எனவே, ஒரு வணிக வங்கியினால் வழங்கக்கூடிய கடன் வகைகளை இந்த வங்கியினால் வழங்க முடியாது. வங்கியின் வைப்புகளில் குறைந்தபட்சம் 60% சதவீதத்தைத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளில் முதலீடு செய்து, எஞ்சிய பகுதியை மாத்திரமே கடன் வழங்குவதற்கோ அல்லது ஏனைய முதலீடுகளுக்கோ பயன்படுத்த முடியும் . சில்லறைக்கடன் ( retail lending) வழங்கலாக வீட்டுக் கடன்கள் மற்றும் தனிப்பட்ட கடன்களை வங்கி வழங்க முடியும் என்ற போதிலும், தனிப்பட்ட கடன் வழங்குவதன் நோக்கம் வியாபார நடவடிக்கைகளுக்காக இருத்தல் கூடாது. ஏனைய வங்கிகளுடன் இணைந்து கூட்டு (syndicate) முறையில் தனியார் துறைக்குக் கடன்களை வழங்க முடியும். அதேபோன்று, நிறுவனக் கடன்களை அரசாங்க நிறுவனங்களுக்கும் வழங்க முடியும்.

2. <u>வங்கி தொடர்பான பொதுவான விடயங்கள்</u>

தேசிய சேமிப்பு வங்கி தாபிக்கப்பட்டதன் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் வங்கியின் நோக்கம் தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

2.1. <u>பணிப்பாளர் சபை கூட்டங்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு</u>

தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு குறித்தும் கலந்துரையாடிய குழு, பணிப்பாளர் சபை கூட்டங்கள் உரிய முறையில் நடத்தப்பட்டுள்ளமையை அவதானித்தது.

## 2.2. ஆண்டு அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தல்

2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டு அறிக்கைகள் முறையே 2023 நவம்பர் 29 மற்றும் 2025 ஏப்ரல் 08 ஆகிய திகதிகளிலும், 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை 2025.11.08ஆம் திகதியிலும் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளமை குழுவிற்கு தெரியவந்தது.

## 2.3. பணியாட்டொகுதியின் கட்டமைப்பு

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுமதியுடன் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் பொது முகாமையாளர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார் என்றும், சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளரொவர் (SDGM) பொது முகாமையாளருக்குத் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்குப் உதவியாக இருப்பார் என்றும், பதினொரு (11) பிரதிப் பொது முகாமையாளர்கள் உரிய பிரிவுகளுக்கு தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், 2025 செப்டெம்பர் 30ஆந் திகதியன்று பணியாட்டொகுதி பற்றிய தகவல்கள் பின்வருமாறு காணப்பட்டன என்றும் குழவால் அவதானிக்கப்பட்டது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் | தற்போதைய ஊழியர் எண்ணிக்கை | | வெற்றிடங்கள் | (மிகை) |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | ஒப்பந்த அடிப்படை | | |
| பொது முகாமையாளர் | 1 | - | 1 | - | - |
| நிறைவேற்று அதிகாரிகள் (தரம் III மற்றும் அதற்கு மேல்) | 1503 | 1354 | 7 | 145 | (3) |
| கனிஷ்ட நிறைவேற்று அதிகாரிகள் (தரம் IV) | 684 | 527 | - | 157 | - |
| பதவிநிலை உதவியாளர்கள் (தரம் V/VI) | 1946 | 1716 | 22 | 353 | (145) |
| சிற்றூழியர்கள் (தரம் VII) | - | 592 | - | - | (592) |
| **மொத்தம்** | **4134** | **4189** | **30** | **655** | **(740)** |

### 2.3.1. பொது முகாமையாளர் பதவி

நிறுவனத்தின் பொது முகாமையாளர் பதவி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்கள் சம்பந்தமாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

பொது முகாமையாளர் பதவிக்காக நிறுவனத்தின் முதுநிலை உத்தியோகத்தரின் பெயர் முன்மொழியப்பட்ட போதிலும், அந்த உத்தியோகத்தர் தகுதியுடையவர் மற்றும் பொருத்தமானவர் (fit and proper) என இலங்கை மத்திய வங்கியினால் அனுமதி வழங்கப்படவில்லை எனவும், அதன் பின்னர் இப்பதவிக்காக வெளியில் இருந்து தகுதியான உத்தியோகத்தரொருவரைத் தெரிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதால், 3 வருட கால ஒப்பந்த அடிப்படையில் தற்போது சேவையில் உள்ள அலுவலர் தெரிவு செய்யப்பட்டதாகவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டில் T-24 எனப்படும் மையப்படுத்தப்பட்ட வங்கி முறைமையினை (centralized co-banking system) உருவாக்குவது தொடர்பாகவும், வங்கியின் பிரதம தகவல் அதிகாரி CIO) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை குறித்தும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

பொது முகாமையாளரின் 922/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் படி, இந்த நிரந்தரப் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் வெளியில் இருந்து ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பதிலாக, உள்ளக ஆட்சேர்ப்பு ஒன்றைச் செய்வதற்கான ஏற்பாடுகள் காணப்படுவதால், பத்திரிகை விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு முன்னர் வங்கியில் கடமையாற்றும் தகுதியான அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கான இயலுமை காணப்பட்டதாகவும், இப்பதவியில் கடமையாற்றிய அலுவலர் மேலும் சில மாதங்கள் அப்பதவியில் நீடித்ததால் புதிய ஆட்சேர்ப்புக்குத் தேவையான கால அவகாசம் இருந்தததையும் குழு அவதானித்தது.

### 2.3.2 <u>வங்கி பணியாட்தொகுதியின் மிகை ஊழியர்கள்</u>

தேசிய சேமிப்பு வங்கியின் பணியாட்தொகுதியில் உள்ள மிகை ஊழியர்கள் குறித்து கவனம் செலுத்திய குழு, 2024 மார்ச் 22 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில், தரம் I தொடக்கம் தரம் VI வரை மாத்திரம் ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்திருப்பதாகவும், சிற்றூழியர் பணியாட்தொகுதியில் 592 பேரும் சுருக்கெழுத்தாளர்/இரகசிய செயலாளர்/ தட்டெழுத்தாளர்கள் 148 பேரும் (நிறைவேற்று நிலை 03 மற்றும் பதவிநிலை உதவித்தொகுதியில் 145 பேர் உள்ளடங்களாக) 2024 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் அவதானித்தது. ஏதேனுமொரு பிரிவுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் வரையில், பதவியுயர்வுகள் முழுமையாக்கப்படும் வரையில், அத்துடன் மைய வங்கி முறை நடைமுறைப்படுத்தப்படும் வரையில் இடைக்கால நடவடிக்கையாக 2024 ஆம் ஆண்டில் இப்பணியாட்டொகுதி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாத போதிலும், இவ்விரண்டு தொகுதிகளும் 2022 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதை குழு அவதானித்தது.

### 2.3.3 வங்கி ஒப்பந்த அடிப்படையில் இரு அதிகாரிகளை இணைத்துக்கொள்ளல்

தேசிய சேமிப்பு வங்கியினால் 2024 ஒற்றோபர் மாதம் ஒப்பந்த அடிப்படையில் கடன் நிர்வாகம் மற்றும் கடன் கட்டுப்பாடு( credit administration and credit control) பணிகளுக்காக இரு அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பதையும், அவர்கள் 2025 ஒற்றோபர் மாதம் (சுமார் ஒரு வருடத்தில்) விலகியுள்ளனர் என்பதையும், அந்த ஆட்சேர்ப்பின் போது சரியான ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்படவில்லை என்பதையும் , அவர்களில் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு 630,000 ரூபாய் போன்ற அதிக சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கமைய வங்கியின் கடன் பிரிவு மற்றும் சட்டப் பிரிவில் சிக்கல் நிலைகள் காணப்படுவதாகவும், குறித்த இரு அதிகாரிகளும் நிறுவனத்திலிருந்து விலகிய பின்னர் வேறு அதிகாரிகள் எவரும் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்பதையும் குழு அவதானித்தது.

தேசிய சேமிப்பு வங்கியின் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான பணியாட்தொகுதி மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்தொகுதி தொடர்பான அறிக்கையொன்றைக் குழுவிடம் சமர்ப்பிக்க இணங்கியதற்கமைய, பிரதான கணக்கீட்டு அலுவலர் 2025.12.15 ஆம் திகதியிட்டு குழுவிடம் சமர்ப்பித்துள்ளார்.

**குழுவின் விதந்துரைகள்**

i. 2024 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட இரு அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பாக மற்றும் மேற்குறித்த ஆட்சேர்ப்புகள் மூலம் வங்கிக்குக் கிடைக்கப்பெற்ற சேவை தொடர்பாக அறிக்கையொன்றைக் குழுவிற்கு சமர்ப்பித்தல்.

### 2.4. வங்கியின் செயல்திறன் (விகிதாசாரப் பகுப்பாய்வு)

வங்கியின் இலக்குகளுக்கு அமைவாகப் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் குறைந்தபட்சம் 60% முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனை குழு அவதானித்தது.

அதேபோன்று, வருமான வளர்ச்சி விகிதமானது (%) 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் (10.5%) ஆகக் காணப்படுவதாகவும், இந்த மதிப்பு மறைப் பெறுமானமாக( negative value) இருப்பது குறித்தும் அவதானம் செலுத்தியது .வங்கியின் முதலீடுகளில் 67.54% சதவீதமானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், திறைசேரி உண்டியல்களுக்கு செலுத்தப்படும் வட்டி

விகிதங்கள் வீழ்ச்சியடைந்தமையே வங்கியின் வருமான வளர்ச்சி விகிதம் மறைப் பெறுமானமாக மாறக் காரணமாகியுள்ளது எனவும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகள் மீண்டும் விலை நிர்ணயம் (re-price) செய்யப்படும் போது இந்த நிலைமை மாறுமாயினும் நிகர,வட்டி எல்லை (Net Interest Margin (NIM)) மாத்திரம் வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதாகப் பொது முகாமையாளர் குழுவிடம் தெரிவித்தார்.

## 2.5. <u>கடன் தொகுப்புப் பகுப்பாய்வு</u>

2025 செத்தெம்பர் 30 ஆம் திகதியளவில் மோட்டார் வாகனக் கடன்கள், நிறுவனக் கடன்கள், வீட்டுக் கடன்கள், நிலையான வைப்புக்களின் மீதான கடன்கள் மற்றும் தனிப்பட்ட கடன்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் வங்கியின் கடன் தொகுப்புக் காணப்படுவதாகவும், 2025.09.30 ஆம் திகதிக்கு தனிப்பட்ட கடன் பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பெறுமதி 202 மில்லியன் ரூபா எனவும் குழு அவதானித்தது.

கடன் பிரிவுகளின் மொத்த நிலுவை 365,314.81 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன், அதில் 9.44% செயலற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்ததும், தனிப்பட்ட கடன்களின் மொத்த நிலுவை ரூ .201,951.29 மில்லியனாக இருந்ததோடு, அதில் 11.82% செயலற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்ததும், நிறுவனக் கடன்களின் மொத்த நிலுவை 67,979 மில்லியன் ரூபாவாக காணப்பட்டிருந்ததும், அதில் 8% செயலற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்ததும் குழுவிற்கு தெரியவந்தது .இந்தச் செயலற்ற கடன் நிலுவையில் 78% சதவீதமானது வெளிநாட்டு நிறுவனமான RPI (Private) Limited நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் எனவும், 20% சதவீதமானது திறைசேரிப் பிணை உத்தரவாதங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனமான டெக்னோபார்க் அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் என்பதும், 2025 செத்தெம்பர் 30 ஆம் திகதிக்கு வாகனக் கடன்களின் மொத்த நிலுவை ரூ .17.20 மில்லியன் என்பதும், அதில் 91.22% செயலற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்ததையும் குழு அவதானித்தது.

2025 செத்தெம்பர் 30 ஆம் திகதிக்கு வங்கியினால் வழங்கப்பட்ட 5 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான கடன்களின் மொத்த நிலுவை 96,046 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், அந்தத் தொகையில் 7,972.28 மில்லியன் ரூபா செயலற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்ததும், மொத்தச் செயலற்ற கடன்களில் 7,001.18 மில்லியன் ரூபா பெறுமதியான 84 கடன் வசதிகள் அதிகூடிய அபாயத் தரத்தின் கீழ், அதாவது " நட்டப் " பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்ததும் குழுவில் வெளியானது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவனக் கடன்கள் தொடர்பாகவும் மற்றும் அந்தக் கடன்களை அறவிடும் செயல்முறை தொடர்பாகவும் குழு அவதானித்தது:

- RPI (Pvt) ltd. நிறுவனத்திற்கு 9 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியமை.
- டெக்னோபார்க் அபிவிருத்தி நிறுவனத்திற்கு (Technopark Development Company) ரூ .750 மில்லியனை வழங்கியமை.
- பிம்புத் பினான்ஸ் பிஎல்சி( Bimputh Finance PLC) நிறுவனத்திற்கு 2016.06.17 அன்று ரூ.200 மில்லியனும் 2019.04.24 அன்று ரூ .100 மில்லியனும் வழங்கியமை.
- கல்கிசை மஹ ஹோட்டலுக்கு ரூ .150 மில்லியனை வழங்கியமை.

### 2.5.1 <u>பிம்புத் பினான்ஸ் பிஎல்சி (Bimputh Finance PLC) நிறுவனத்திற்குக் கடன் வழங்கியமை</u>

பிம்புத் பினான்ஸ் நிறுவனமானது ஒரு நுண்நிதி கடன் வழங்கும் நிறுவனமாக காணப்படுவதால் அத்தகைய நிறுவனத்திற்கு இந்த வங்கியினால் கடன் வழங்க முடியுமா என்பது பற்றியும், பிம்புத் பினான்ஸ் நிறுவனம் தற்போது இயங்குகின்றதா என்பது தொடர்பிலும், குறித்த நிறுவனத்திற்கு முதலாம் கடன் தொகையாக 2016 ஆம் ஆண்டில் ரூ.200 மில்லியனை வழங்கிய பின்னர், 2019 ஆம் ஆண்டில் இரண்டாவது கடன் தொகையை வழங்கும் சந்தர்ப்பத்தில் முதலாம் கடன் தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்தமை குறித்துப் பரிசீலிக்கப்பட்டதா என்பது பற்றியும், குறிப்பிட்ட ரூ.200 மில்லியனுக்காக வழங்கப்பட்டுள்ள பிணை உத்தரவாதம் பற்றியும் குழு வினவியது.

பிம்புத் பினான்ஸ் நிறுவனமானது தேசிய சேமிப்பு வங்கியினால் கடன் வழங்கப்படக்கூடிய ஒரு நிறுவனம் என்பதால், அவர்கள் இந்த வங்கியிடமிருந்து கடனைப் பெற்று தமது கடன்களை மீண்டும் மீள்நிரப்பல் (refinance) செய்ய முடியும் எனவும் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

மேற்படி கடனை வழங்குவதற்காக தயா குரூப் குழும நிறுவனங்கள் (Daya Group of Companies) நிறுவனத்தினால் நிறுவனப் பிணை (corporate guarantee) வழங்கப்பட்டுள்ளதாக வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) தெரிவித்தார்.

வங்கி இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடனை அறவிடுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தாமதித்துள்ளதாகவும், தயா குரூப் நிறுவனமானது அதன் கீழ் உள்ள ஒரு நிறுவனத்திற்கு கடனைப் பெறுவதற்காக நிறுவனப் பிணையை வழங்கியுள்ளதாகவும், நுண்நிதி கடன் வழங்கும் நிறுவனமொன்றிற்கு இந்தக் கடன் தொகையை வழங்குவது

வங்கியின் நோக்கங்களின்படி சிக்கலானது எனவும், இதில் கவனக்குறைவாகச் செயற்பட்டமை குறித்து வங்கியும் பணிப்பாளர் சபையும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் வலியுறுத்திய குழு, இந்த நிறுவனத்தை தீர்த்துக்கட்டும் போது வங்கிக்கு ஏதேனும் ஒரு பங்கு கிடைக்குமா என வினவியது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர், இந்த நிறுவனத்தை தீர்த்துக்கட்டும் போது தாமதிக்காமல் இதில் வங்கி தொடர்புபட்டிருந்திருக்க வேண்டும் எனவும், தற்போது அந்தச் சந்தர்ப்பத்தை வங்கி இழந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

நிறுவனம் தொடர்பான நிதி நெருக்கடி( financial distress) மற்றும் அதிகளவிலான செயலற்ற கடன்கள் காணப்பட்டமை பற்றிக் குறிப்பிட்டு, குறித்த கடன் தொகையை வழங்குவதற்கு முன்னர் இது குறித்து அறிக்கையிடப்பட்டிருந்த பின்னணியிலேயே இக்கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிறுவனத்தின் காசுப் பாய்ச்சலில் (cash flow) அபாயம் காணப்படுவதால் கடனை அறவிடும் போது சிக்கல்கள் ஏற்படும் எனவும் பதில் கணக்காய்வாளர் தலைமையதிபதி குறிப்பிட்டார்.

### 2.5.2 <u>நிலையான வைப்புக்களின் மீதான கடன்கள்</u>

வங்கியினால் நிலையான வைப்புக்களின் மீது வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துவதிலும் தவறு விடப்பட்டுள்ளதையும், அதன் கீழ் செயலற்ற கடன்களாக 69.23 மில்லியன் ரூபா காணப்படுவதையும் குழு அவதானித்தது.

இது குறித்து விடயங்களைத் தெரிவித்த பொது முகாமையாளர், இங்கு செயலற்ற கடன்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவை அபாயகரமான கடன்கள் அல்ல எனத் தெரிவித்தார்.

### 2.5.3 <u>டெக்னோபார்க் அபிவிருத்தி நிறுவனத்திற்கு (Technopark Development Company) வழங்கப்பட்ட கடன்</u>

இந்த நிறுவனத்திற்கு ரூ .750 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதாகவும், 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக இலங்கையின் சில இடங்களில் (குருநாகல், காலி, கண்டி, நுவரெலியா) தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதற்காக டெக்னோபார்க் அமைப்பதற்கான கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதாகவும், இக்கருத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டளவில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், டெக்னோபார்க் பணிப்பாளர் சபை விலகியுள்ளதாகவும், அக்காலப்பகுதியில் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இருந்த இந்த நிறுவனம் தற்போது நிதி அமைச்சின் கீழ் உள்ளதாகவும், இந்தக் கடன் ஒரு அரசுரிமைப் பிணை மீது

வழங்கப்பட்டிருந்ததால் பொதுத்திறைசேரியினால் செலுத்துவதற்கான பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குழுவில் வெளியானது.

**03. <u>2021 ஒகத்து 06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்</u>**

**3.1 <u>விதந்துரை இலக்கம் 13</u>**

**<u>ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு (KDU) வழங்கப்பட்ட கடன்</u>**

2013 ஆம் ஆண்டில் வங்கியினால் பெறப்பட்டிருந்த 750 மில்லியன் அமெரிக்க டொலர் பிணைமுறியானது, 2018 செத்தெம்பர் 17 ஆம் திகதி முதிர்வடையும் போது மீளச் செலுத்தப்பட வேண்டியிருந்தது .வங்கி இந்தப் பிணைமுறியிலிருந்து 201 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு (KDU) வழங்கியிருந்தது .பெற்றுக் கொண்ட கடன் தொகையை மேற்கூறிய முதிர்வுத் திகதியில் பல்கலைக்கழகத்தினால் செலுத்த முடியாமற் போனமையால், பிணைமுறியின் ஒரு பகுதியை மீளச் செலுத்துவதற்காக வங்கிக்கு ஜேர்மனியின் கொமர்ஸ் வங்கியிடமிருந்து 3 வருட காலத்திற்கு மாற்றம் மற்றும் 2% வட்டி விகிதத்தின் கீழ் மற்றுமொரு 100 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடனைப் பெற வேண்டியேற்பட்டமை குழுவில் வெளியானது.

இதன் போது எந்தவொரு புறக்கணிப்பும் இன்றி வங்கி மாதாந்தம் குறித்த வட்டித் தொகையை செலுத்தியிருந்ததாக உறுதி செய்ததுடன், KDU நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் வசதி2018 , 2020மற்றும்2024 ஆண்டுகளில் மூன்று தடவை மறுசீரமைக்கப்பட்டிருந்தமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.

2025 மார்ச் 17 மற்றும் 2025 செப்தெம்பர் 17 ஆகிய திகதிகளில் முறையே 4,137.32 மில்லியன் ரூபா மற்றும் 3,917.39 மில்லியன் ரூபாவை KDU செலுத்தியுள்ளது என்றும், மேற்படி கடன் தொகை செயல்ரீதியான கடன் வகையில் உள்ளடங்குவதாகவும், ஜெர்மனி கொமர்ஸ் வங்கியிடம் பெற்றுக் கொண்ட கடன் தொகையை வங்கி முற்றாக செலுத்தியுள்ளது என்றும் குழு அவதானிப்புச் செய்ததுடன், இந்தக் கடன் தொகையை KDU செலுத்துவதை புறக்கணிப்புச் செய்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி வினவியது.

இக்கடனுக்கு திறைசேரியினால் பிணை வழங்கப்பட்டுள்ளதனால் திறைசேரியினால் முழுமையாக கொடுப்பனவு செலுத்தப்படுவதாகவும், அதற்கு கடன் மறுசீரமைப்புச் செய்யும் திட்டம் கோரப்பட்டுள்ளது என்றும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

### 3.2 <u>சிபாரிசு இலக்கம் 21</u>

**<u>வங்கியின் நிரந்தர பணியாட்டொகுதி வருடா வருடம் திருத்தம் செய்யப்படுதல்</u>**

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று வங்கியின் நிரந்த பணியாட்டொகுதி வருடா வருடம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை குழு அவதானிப்புச் செய்ததுடன், இது தொடர்பான காரணங்கள் 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் வினவப்பட்டுள்ளது என்றும், வங்கியில் தற்போதைய பணியாட்டொகுதிப் பதவிகள் பணிப்பாளர் சபையினால் அடிக்கடி திருத்தம் செய்யப்பட்டு அங்கீகரிப்பது வங்கியின் நிலைபேறான தன்மைக்கு பாதிப்பானதாகும் என்றும், அதன் காரணமாக நல்லாட்சி நடைமுறைகளை பின்பற்றுவது பலவீனப்படுத்தப்படுவதாகவும் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை பற்றி குழு கவனம் செலுத்தியதுடன், வங்கியின் நிலைத்திருத்தல் மற்றும் நிலைபேறான தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வங்கி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு கருத்து வெளியிட்டது.

வங்கி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பது வினைத்திறன்மிக்க நிருவாகத்தை எதிர்பார்த்தாகும் என்றும், 2021.08.06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்திலும் இது சம்பந்தமாக சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை வங்கி மேற்படி சிபாரிசுகளை பின்பற்றுவதில்லை என்றும், வங்கிக்கு முறையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை இதுவரை இல்லை என்றும், வங்கியிலுள்ள பணியாட்டொகுதிக்கு தகுந்த மாற்றுத் திட்டம் உள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும், நடைமுறைக்கு சாத்தியமான அமுல்படுத்தக்கூடிய மாற்றுத் திட்டம் இல்லை என்றும், எதிர்காலத்தில் இந்த நிலைமையைத் தவிர்த்துக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வலியுறுத்தினார்.

**<u>மையப்படுத்தப்பட்ட இணை வங்கி முறைமை (Centralized co-banking system)</u>**

வங்கியின் மையப்படுத்தப்பட்ட இணை வங்கி முறைமை (Centralized co-banking system) இனை ஆரம்பிப்பது பற்றி குழு கவனம் செலுத்தியது.

மேற்படி தரவு முறைமையைத் தயார் செய்வதற்கு அமெரிக்க டொலர் மில்லியன் 12.5 ஐ செலவிட உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டு, இதுவரை சுமார் 9 மில்லியன் அமெரிக்க

டொலர் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ள நிலையில், வருடத்திற்கு இரண்டு தடவை இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்படவுள்ள அறிக்கைகள் 06 மாதங்கள் தாமதமடைந்துள்ளமை காரணமாக வங்கிக்கு நிதிப் புலனாய்வு அலகினால் 35 மில்லியன் ரூபா ஆன தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக குழு வினவியது.

இதற்குப் பதிலளித்த இயைபுப் பிரிவின் தலைவர், நிதி உளவு அலகினால் 03 காரணங்களின் பேரில் மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதென்று குறிப்பிட்டார்.

குறித்த கணினி முறைமையின் பயனர் அங்கீகரித்தல் (User acceptance) தொடர்பாக பரிசோதிக்கப்பட்டுள்ளதா என்பதும், முறைமையின் சர்வர் (servers) தடைப்படும் பட்சத்தில் தாமதிக்காது அதனை தீர்த்துக் கொள்ள முடியுமா என்பது பற்றியும் கவனம் செலுத்திய குழு, இந்த கணினி முறைமையில் பயனர் அங்கீகரித்தல் (User acceptance) பரிசோதனைக்கு 500,000 அமெரிக்க டொலர் அளவான முதலாவது கொடுப்பனவு 2023.04.10திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், 200,000 அமெரிக்க டொலர் அளவான இரண்டாவது கொடுப்பனவு 202410.23. ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எஞ்சிய தொகை 2024.11.09 திகதி செலுத்தப்பட்டுள்ளது என்றும் ,LOS (Loan Originating System)

இற்கு 2023 ஆண்டு 61, 518அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளது என்றும், அவ்வாறாயினும் வேறு கம்பனிக்கு இதனை வழங்க பணிப்பாளர் சபை கொள்கைசார் தீர்மானம் மேற்கொண்டுள்ளமையும் அவதானிப்புச் செய்யப்பட்டது.

இந்த முறைமையை தெரிவு செய்துகொள்வதில் ஒரு சில தொழில்நுட்ப சிக்கல்கள் காணப்படுவது அவதானிக்கப்படுவதாகவும், வங்கி ஆரம்பிக்கப்பட்டு 51 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை இந்த நிறுவனத்திற்கு தகுந்த கணினித் தரவு முறைமை தயார் செய்யப்படவில்லை என்றும், இந்த நிலைமையை சீராக்கல் செய்துகொள்ள வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

**குழுவின் சிபாரிசு**

i. வங்கிக்கு பெருத்தமான கணினி முறைமையை துரிதமாகத் தயார் செய்தல்.

## 04. <u>2022 மற்றும் 2023 ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>

### 4.1 <u>ஆட்கள் இரண்டு பேருக்கு 2020 டிசம்பர் 23 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ரூ.மி. 164.73 ஆன கூட்டாதனக் கடன்</u>

ஆட்கள் இருவருக்கு 2020 டிசம்பர் 23 ஆம் திகதி வழங்கியினால் ரூ.மி. 164.73 ஆன கூட்டாதனக் கடன் வழங்கியமை தொடர்பாக பின்வரும் விடயங்களை குழு அவதானிப்புச் செய்தது.

- கடனை மீள அறவிட்டுக் கொள்வதற்குள்ள ஆற்றலை உறுதி செய்வதற்கு கடன் வாடிக்கையாளர்களின் வருமான மூலங்களை உறுதி செய்துகொள்வதற்கு வங்கி தகுந்த கொடுக்கல் வாங்கல் மதிப்பீட்டை மேற்கொண்டிருக்கவில்லை.
- ஆரம்ப கட்டத்தில், கடன் தகவல் பணியக அறிக்கை மற்றும் கடன் வாடிக்கையாளர்களின் வியாபாரங்களின் பாதகமான நிலைமைகள் காரணமாக கடன் வழங்க பணிப்பாளர் சபை மற்றும் கடன் குழு இணங்கியிருக்கவில்லை எனினும், பின்னர் கடன் தகவல் பணியக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை பொருட்படுத்தாது மற்றும் வாடிக்கையாளர்களிடம் DTA காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளாது, மீளச் செலுத்தும் காலத்தை 15 வருடம் முதல் 20 வருடம் வரை நீடிப்புச் செய்து மற்றும் 75% ஆன பெறுமதிக்கும் மேல் கடன் விகிதத்தை விஞ்சி மேற்படி கடன் தொகையைப் பெற்றுக் கொடுக்க 2020 செப்தெம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற விசேட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள விசேட பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு மேற்படி கடன் தொகையை அங்கீகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்த திறைசேரியின் பிரதிநிதி உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இருவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மேற்படி கடன் வாடிக்கையாளர் ஒருவரின் பங்கேட்புடன் குறித்த கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. எனவே பணிப்பாளர் சபை தீர்மானங்களின் வெளிப்படைத்தன்மை சிக்கலானதாகும்.
- கடன் வாடிக்கையாளர் இரண்டு தவணைகளை மாத்திரம் செலுத்தியுள்ளார் என்பதுடன், ரூ.மி. 39.36 ஆன 27 தவணைகள் நிலுவையாகக் காணப்பட்டன.
- 2023 மே 31 ஆம் திகதிக்கு மொத்தமாக அறவிடப்பட வேண்டியுள்ள கடன் நிலுவை ரூ.மி. 164,01 ஆகும்.
- 2023 யூலை 24 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், கடன் தொகைக்குப் பிணையாக அடகு வைக்கப்பட்ட ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏலம்விடும் செயன்முறையை வழிப்படுத்த பணிப்பாளர் சபையினால் பொது முகாமையாளர் (அறவீடு) நியமனம் செய்யப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், உதவிப் பொது முகாமையாளர் (அறவீடு) 2024

பெப்ருவரி 05 ஆம் திகதிய கடிதம் மூலம் பிரதான முகாமையாளர் (அறவீடு) இற்கு மேற்படி தத்துவத்தை சாட்டுதல் செய்துள்ளார் என்பதுடன், இதன் மூலம் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை விஞ்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- வங்கியினால் 2024.02.06 ஆம் திகதி ஆதனத்தை விற்பனை செய்வதற்கான பகிரங்க ஏலம் நடாத்தப்பட்டது.
- எனினும், எதிர்பார்த்தவாறு கொள்வனவாளர்கள் வருகைதந்திருக்காமை காரணமாக, ஆதனம் வங்கிக்கு சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டது. வங்கி மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்வதற்காக 2024.08.02 ஆம் திகதி கேள்வி அறிவித்தலை வெளியிட்டதுடன், கேள்விகளை ஏற்றுக் கொள்வது 2024.08.23 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு நிறைவு செய்யப்பட்டது. ஒரு விலைமனு மாத்திரம் கிடைத்துள்ள போதிலும், மேற்படி விலைமனுதாரர் காணியைக் கொள்வனவு செய்வதை நிராகரித்துள்ளார். எனவே, ஆதனம் தொடர்ந்தும் வங்கியின் பெயரில் காணப்படுகின்றது.
- 2025 செப்தெம்பர் 30 திகதிக்கு கடன் தொகையில் மொத்தமாக அறவிடப்பட வேண்டியுள்ள தொகையில் மொத்தமாக அறவிட வேண்டிய நிலுவை ரூபா மில்லியன் 220.755 ஆக இருந்தது. எவ்வாறாயினும், 2024 யூலை 04 ஆம் திகதிய விலைமதிப்பு அறிக்கைக்கு அமைய, காணியின் சந்தைப் பெறுமதி ரூ.மி. 197.4 ஆகும்.

2020.10.14 ஆம் திகதி விலை மதிப்புச் செய்த போது சந்தை விலை ரூ.மி. 195 ஆகும் என்றும், விற்பனைப் பெறுமதி ரூ.மி. 190 ஆகும் என்றும், 2020.11.10 திகதி மேற்கொண்ட விலைமதிப்பின் போது சந்தை விலை ரூ.மி. 218 மற்றும் விற்பனை பெறுமதி ரூ.மி. 210 ஆகும் என்றும், இந்த விலைமதிப்புக்களை விலைமதிப்பாளர்கள் இருவர் மேற்கொண்டுள்ளார்கள் என்றும், 2020 ஆம் ஆண்டின் விலைமதிப்பை விடவும் 2024 ஆம் ஆண்டின் விலை மதிப்பு கூடுதல் பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டுமாயினும், 2020 ஆம் ஆண்டு மேற்கொண்ட இரண்டாவது விலைமதிப்பு கூடுதல் பெறுமானத்தைக் கொண்டுள்ளது என்றும், கடன் வழங்கும் போது பொதுவாக இரண்டு தடவை விலை மதிப்புச் செய்வதில்லை எனினும், வழங்கக்கூடிய கடன் தொகையை அதிகரிப்பதற்காக இரண்டாவது விலை மதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி கடன் பெறுபவருக்கு செலுத்தக்கூடிய தொகைக்கு அமைய சொத்தின் பெறுமதியில் 75%ஆன உச்சளவுக்கு செல்ல முடியுமாயினும், இதற்கு குறித்த பணிப்பாளர் சபைப் பத்திரத்திற்கு அமைய சொத்தின் பெறுமதியில் 82% ஆன விகிதத்திற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும், 2020 ஆண்டின் பின்னர் இந்த விலைமதிப்பாளர்களின் குழுமம் பற்றி மதிப்பீடு செய்து இரண்டாவது விலைமதிப்பை மேற்கொண்ட விலைமதிப்பாளர் குழுமத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் உதவிப் பொது முகாமையாளர் (கடன் அறவீடு) விளக்கமளித்தார்.

மேற்படி இரண்டாவது மதிப்பீட்டை வங்கியின் செலவில் மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் கூட்டக் குறிப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள குழு, இதில் சட்டத்துக்கு முரணான தலையீடுகள் இருப்பதனால் கடன் அறவிட்டுக் கொள்வது மாத்திரம் போதுமானதல்ல என்றும் வலியுறுத்தியது.

<u>குழுவின் சிபாரிசு</u>

i. மேற்படி கடன் வழங்கும் முறையியல் தொடர்பான சட்டத்துக்கு முரணான தலையீடுகள் பற்றியும், ஆதனங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தொடர்பான செயன்முறை பற்றியும் உள்ளக விசாரணையொன்றை மேற்கொண்டு குழுவிடம் அறிக்கை சமர்ப்பித்தல்.

### 4.2 <u>கடன் தகவல் பணியக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வசதிகள் 10 இன் முறையற்ற மீளச் செலுத்தலைக் கவனத்தில் கொள்ளாது கடன் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூ.மி. 12.6 ஆன கடன் தொகை வழங்கப்பட்டமை</u>

வங்கியினால் 2019 செப்தெம்பர் 23 ஆம் திகதி கடன் வாடிக்கையாளர் ஒருவருக்க்கு ரூ.மி. 12.6 ஆன கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது என்றும், 2024 மே 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை மற்றும் மொத்த நிலுவைத் தொகை முறையே ரூ.மி. 12.930 மற்றும் ரூ.மி. 7.664 ஆகும் என்றும், ஒரு வீடு மற்றும் ஆதனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக மேற்படி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும் குழு அவதானிப்புச் செய்தது.

கடன் வாடிக்கையாளர் தொடர்பாக கடன் தகவல் பணியக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வசதிகள் 10 தொடர்பான முறையற்ற மீளச் செலுத்தலைக் கவனத்தில் கொள்ளாது உதவி முகாமையாளர் (கடன்) இந்தக் கடன் தொகையை அங்கீகரித்துள்ளார் என்றும், இந்தக் கடன் வாடிக்கையாளர் ஒரு தவணையை மாத்திரம் செலுத்தியுள்ளார் என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. 2022 யூலை 19 ஆம் திகதி உதவிப் பொது முகாமையாளர் (அறவீடு) ஆதனங்களை ஏலத்தில் விடுவது தொடர்பான இறுதி அறிவித்தலை கடன் வாடிக்கையாளருக்கு அனுப்பியுள்ளார். வங்கியினால் அறவிட்டுக் கொள்வதற்கான பராட்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது, ஏலத்தில் விடுவதை தடுப்பதற்காக 2023 சனவரி 18 ஆம் திகதி வாடிக்கையாளர் தடை உத்தரவைப் பெற்றுள்ளார். எவ்வாறாயினும் வங்கியானது, கடன் தொகைக்கு எதிராக அறவிட்டுக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளது என்பதை குழு அவதானிப்புச் செய்தது.

## 05. தற்போதைய செயலாற்றுகை தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

### 5.1 RPI Private Limited எனும் மாலைத்தீவு கம்பெனிக்கு வங்கியினால் வழங்கப்பட்டுள்ள ஒன்பது மில்லியன்கள் பெறுமதியான ஐக்கிய அமெரிக்க டொலர் கூட்டுக் கடன் (Syndicate Loan)

குறித்த வங்கிகளான (NSB) மற்றும் மக்கள் வங்கியால் 2018ஆம் ஆண்டு யூன் மாதம்14 ஆம் திகதி மாலைத்தீவு கம்பனியொன்றுக்கு 10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கூட்டுக் கடன் (Syndicate Loan) வசதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மொத்தக் கடன் தொகையில் 90% ஆகிய ஒன்பது மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும் வங்கி பங்களிப்புச் செய்துள்ளதுடன் கடன் பெறுனர் எந்தவிதமான மூலதனத் தொகையையும் மீளச் செலுத்தவில்லை என்றும், 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் நிலுவை வட்டித் தொகையாகிய 5.73 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் என்பதுடன், இதற்கமைவாக குறித்த திகதியில் அறவீடு செய்யவேண்டிய மொத்த தொகையான 14.73 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ரூ. 4,455.81 மில்லியன்களுக்குச் சமமானது) என்பது குழுவின்போது வெளிக்கொண்டு வரப்பட்டதுடன், இது தொடர்பாக கீழ் குறிப்பிட்டுள்ள அவதானிப்புக்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது.

- கடன் வழங்களின் பின்னரான மீளாய்வுப் பொறிமுறை பற்றிய சுற்றறிக்கை 1641/2015 ஆம் இலக்கத்திற்கு அமைவாக கடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், மூன்று மாத காலப்பகுதியினுள் கடன் வசதிகள் தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகளை வங்கியினால் மேற்கொள்ளப்படாமை.
- முதலாவது கடன் தொகை விடுவிக்கப்பட்ட 2018 யூன் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் வங்கியினால் மூலதனத்தை மீளச் செலுத்துவதற்கு ஒரு வருட காலப்பகுதி ஆரம்ப நிவாரணக் காலப்பகுதியாக வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் 2022ஆம் ஆண்டு யூன் மாதம் வரையிலான காலப்பகுதி உள்ளடங்கும் வகையில் மூலதனம் மற்றும் மீளச் செலுத்துவதற்கான குறிப்பிட்ட நிவாரணக் காலப்பகுதி பல தடவைகள் நீடிக்கப்பட்டுள்ளன.

2025.11.03 ஆம் திகதி வரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தரவுகளுக்கமைவாக முதல் கட்டத்தில் பெற்றுக்கொண்ட கடன் தொகையில் 0.82 மில்லியன் டொலர்கள் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளதாகவும், வட்டியாக கிடைத்துள்ளது 1.96 மில்லியன் டொலர்களாகும் என்பது குழுவால் அவதானிக்கப்பட்டது.

குறித்த கருத்திட்டத்தில் காணப்படுகின்ற பெரிய தனி வீடுகளை **((Villa)** நிர்மாணிப்பதன் முன்னேற்றம் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

| **பெரிய தனி வீடுகளின் வகை ((Villa)** | **பூர்த்தி செய்யும் சதவீதம்** | |
|---|---|---|
| | **கம்பனியின் பட்டய நில அளவையாளரின் அளவீட்டுப்பத்திரங்களின் அடிப்படையில் (BOQs) ( 2018திசெம்பர் 31)** | **2023சனவரி மாதம் 2 மற்றும்3 ஆம் திகதிகளில் மேற்கொண்ட சுயாதீன மதிப்பீட்டுக்கு அமைவாக** |
| Garden Villas | 99% | 90% |
| Semi Water Villas | 78% | 30% |
| Beach Villas | 78% | 10% |
| Water Villas | 72% | 0% |
| Front of House | 23% - 93% | 0% - 60% |
| Back of House | 79% - 100% | 0% - 90% |

கம்பனியின் பட்டய நில அளவையாளரின் அளவு விபரப் பட்டியல்கள் மற்றும் அதற்கு 05 வருடங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சுயாதீன பரிசோதகரின் அறிக்கையுடன் ஒப்பீடு செய்து பார்க்கையில் குறைந்தளவான நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளதாகவும், குறித்த இடப் பரிசோதனை 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதி பிரதிப் பொது முகாமையாளர் (கடன்) மற்றும் நிறுவன நிதிப் பிரிவின் (Corporate Finance Division) சிரேஷ்ட முகாமைமையாளரொருவரால் மேற்கொள்ளப்பட்டதாகவும், பின்னர் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி குறித்த அதே பிரிவின் இரண்டு சிரேஷ்ட முகாமையாளர்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், பல்வேறு வகுதிகளின் கீழ் 50% தொடக்கம் 100% வரையிலான முன்னேற்றத்தை இடப் பரிசோதனையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நிர்மாணப் பணிளின் முன்னேற்றத்தை சரியான முறையில் மதிப்பீடு செய்வதற்கு மிகவும் முக்கியமான தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட வங்கி பொறியியலாளர் ஒருவர் குறித்த இடப்பரிசோதனை குழுவிற்கு உள்ளடக்கப்படாமை குழுவில் தெரியவந்தது.

இது தொடர்பாக பொறுப்புக் கூறும் அலுவலர் கீழ்வருமாறு விடயங்களை முன்வைத்தார்.

- குறித்த விடயம் தொடர்பாக சுயாதீன விசாரணையை மேற்கொண்டுள்ள Pricewaterhouse Coopers (PwC) நிறுவனத்திற்கு ரூ. 9 மில்லியன்கள் செலுத்தியுள்ளதாகவும்,

- குறித்த கடன் தொகை உட்பட பிரச்சினைக்குரிய கடன் தொகை 04 தொடர்பாகவும் சட்டத்துறை தலைமையதிபதியை தெளிவூட்டியுள்ளதுடன் இது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் ஆற்றுப்படுத்துமாறு அவர் அறிவித்துள்ளதாகவும்,
- இதற்கு மேலதிகமாக இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் செயலாரைத் தெளிவூட்டியதாகவும்,
- குறித்த கடன் தொடர்பான வட்டித் தொகை மாத்திரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு செலுத்தியுள்ளதுடன் இது தொடர்பான கலந்துரையாடல்கள் (re-negotiations) மாத்திரம் இடம்பெற்றுள்ளதாகவும்,
- இது தொடர்பாக புதிய அரசாங்கத்தின் நிதி அமைச்சருடனும் கலந்துரையாடியதாகவும்,
- இது தொடர்பாக விரிவான விசாரணையொன்று மேற்கொள்ள வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தேவைப்படுவதாக அமைச்சர் தெரிவித்தமையால், இது தொடர்பான அனைத்து ஆவணங்ளையும் ஆற்றுப்படுத்தியதாகவும்,
- இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம் குறித்த கருத்திட்டமானது மாலைதீவுக்குச் சொந்தமான தீவுகளில் காணப்படுவதால் இதற்கு மாலைத்தீவின் சட்டம் தொடர்புபடுவதால் குறித்த விடயத்தை மாலைத்தீவின் விஷேட நிபுணர் ஒருவருக்கு ஆற்றுப்படுத்துமாறு அறிவித்துள்ளதாகவும்,
- குறித்த கடனானது கூட்டுக் கடன் என்பதால் ஏனைய வங்கிளுடனும் கலந்துரையாடுவதற்கு பிரதிப் பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளதாகவும்,
- குறித்த கடனை மறுசீரமைப்பது அல்லது மீள அறவீடு செய்தல் (recovery) வேண்டுமென்றும்.

குழுவால் கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கடன் உடன்படிக்கையின் F 30 (r) பிரிவிற்கமைவாக கடன் பெறுநரால் குறித்த காப்புறுதி உறுதிகள் காலவதியாகும் திகதிக்கு முப்பது நாட்களுக்கு குறையாத காலப்பகுதிக்கு முன்னராக, பிரயோக ரீதியாக, அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும், காப்புறுதி உறுதியின் காலவதியாகும் திகதியில் இருந்து ஏழு நாட்களுக்கு குறையாத காலப்பகுதியில் காப்புறுதி உறுதிகளை புதுப்பிக்கும் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியுள்ள போதிலும், 2021 ஆம் ஆண்டு யூலை மாதத்தின் பின்னரான காலப்பகுதிக்கு காப்புறுதிக் காப்பீடு தொடர்பான சாட்சிகளை கடன் பெறுநர் வங்கியிடம் சமர்ப்பிக்கவில்லை என்றும்,
- கடன் உடன்படிக்கைக்கு அமைவாக, ஆகக் குறைந்தது 270,000 ஐக்கிய அமெரிக்க டொலர் மீதியுடன் கூடிய கடன் சேவைகள் ஒதுக்கு கணக்கொன்றை (DSRA) திறந்து பேணிச்செல்ல வேண்டியுள்ள போதிலும், கடன் பெறுநர் தேவையான ஆகக் குறைந்த மீதியை பேணிச் செல்லாததுடன் 2025 செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியாகும் போது கடன் சேவை ஒதுக்குக் கணக்கில் 27,987.69 ஐக்கிய அமெரிக்க டொலர் மீதி மாத்திரம் காணப்பட்டமை.

குறித்த கடன் தொகை வழங்கப்பட்டு மூன்று மாதங்களினுள் இது தொடர்பான பின் மதிப்பீடு (post review) மேற்கொள்ளப்படவில்லை என்றும், மேற்படி மதிப்பீடு மேற்கொண்டிருப்பின், பின்னர் வழங்கிய 2.25 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களையும் வழங்காமல் இருந்திருக்கலாம் என்றும் பதில் கடமையாற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்தார்.

RPI Private Limited கம்பனியானது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா, குறித்த கொடுக்கல் வாங்களை பிரதிநித்துவப்படுத்துவதற்கு இலங்கையர் ஒருவர் காணப்பட்டாரா இவ்வாறான கம்பனிக்கு கடன் வழங்குவது வங்கிச் சட்டத்திற்கு ஏற்புடையதா, இலங்கையில் கிளையினைக் கொண்டிராத, உள்நாட்டு பிரதிநிதியும் காணப்படாத கம்பனிக்கு கடன் வழங்கப்பட்டது எவ்வாறு என்பதுடன் இது தொடர்பாக காணப்படுகின்ற பிணை யாது என்பது பற்றியும் குழுவால் வினவப்பட்டது.

இது தொடர்பாக உதவிப் பொது முகாமையாளர் (நிறுவன ரீதியான கடன்) தெரிவிக்கையில், வரியை தடுத்து வைக்கும் உரிமையினை மாத்திரம் பிணையாகப் பெற்றுள்ளதாகவும், ஆதனப் பிணைகள் இல்லையென்றும் தெரிவித்தார்.

வங்கியின் பிரதான இடர் முகாமைத்துவ அலுவலரால் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி, குறித்த கடன் வழங்கல் அதிக அபாயம் மிக்கது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இந்தளவு அதிக அபாயம் காணப்படுகையில் குறித்த கடன் வழங்கலை அங்கீகரித்த பணிப்பாளர் சபை தவறு இழைத்துள்ளதாகவும், குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்ட தரப்பினர்களுக்கிடையில் அக்கறையில் முரண்பாடு காணப்படுகின்றதா என்பது தொடர்பாக ஆராய்தல் வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும் குழுவால் வலியுறுத்தப்பட்டது.

குறித்த கடன் தொடர்பாக அமைச்சிடம் ஆலோசனை கோரி 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் கடிதமொன்றை ஆற்றுப்படுத்தியதாகவும், குறித்த கடன் வழங்குகையில் திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்றும் இது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும் என்பதால் கடனை துரிதமாக அறவீடு செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கியதாகவும், பொதுவாக எந்தவொரு நட்டமும் ஏற்படும்போது நிதிப்பிரமாணம் 104 இற்கமைவாக உள்ளக விசாரணையொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டும் எனவும், இது தொடர்பாக அமைச்சு மட்டத்திலான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு குழுவின் விதப்புரைக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும், இதன்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்வதற்கான இயலுமை காணப்படுவதாகவும் பிரதான பொறுப்புக் கூறும் அலுவலர் தெரிவித்தார்.

கடன் தொடர்பான விடயங்களில் சட்டப் பிரிவின் தலையீடு மற்றும் அதன் உண்மைத் தன்மை தொடர்பாக சிக்கல்கள் காணப்படுவதாகவும் குழுவால் வலியுறுத்தப்பட்டது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

i. குறித்த கடன் தொகையை அறவீடு செய்வதற்கு சட்டத்துறை தலைமையதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வழக்குத் தாக்கல் செய்தல்.

ii. RPI Private Limited எனும் மாலைத்தீவு கம்பனிக்கு குறித்த கூட்டுக் கடன் வழங்கும் செயன்முறையின் போது வங்கி அலுவலர்களின் கவனயீனமான செயற்பாடுகள் மற்றும் பொறுப்பற்ற நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தி இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

iii. வங்கியின் சட்டப் பிரிவு முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையின் போது, தேவையான நடவடிக்கைளை முறையாக மேற்கொள்கின்றதா என்பது தொடர்பாக ஆராய்வதற்கு அதிக கவனம் செலுத்துதல்.

iv. நிறுவனத்தின் சட்டப் பிரிவற்கான புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்கையில் உரிய முறையிலும் சட்டரீதியாகவும் மேற்கொள்ளுதல்.

v. தேசிய சேமிப்பு வங்கியினால் மாலைதீவின் RPI Private Limited கம்பனிக்கு வழங்கியுள்ள மீள அறவீடு செய்ய முடியாதுள்ள கூட்டுக் கடன் தொகை (Syndicate Loan) தொடர்பாக கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு இலஞ்ச ஊழல் சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவிற்கு / குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்தல்.
   - குறித்த கடனைப் பெற்றுக்கொண்ட RPI Private Limited எனப்படும் மாலைத்தீவு கம்பனியின் நிலைத்திருப்பு தொடர்பான தகவல்கள்
   - மேற்படி கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த ஆட்கள் தொடர்பான தகவல்கள்
   - கடன் வழங்கும் செயன்முறையில் காணப்படுகின்ற சிக்கலான நிலைமைகள் தொடர்பான பூரணமான தகவல்கள்
   - கடன் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கிய தரப்பினர்களுடன் குறித்த கம்பனிக்கு காணப்படுகினற அக்கறை தொடர்பான தகவல்கள்

vi. நிதிப் பிரமாணத்தின் 104 இற்கமைவாக குறித்த கூட்டுக் கடன் வழங்கியமை தொடர்பாக உள்ளக விசாரணையொன்றை மேற்கொள்ளுதல்.

**5.2<u>கடன் கோப்புக்கள் காணாமல் போயுள்ளமை</u>**

பிராந்திய முகாமையாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தல்களின் அடிப்படையில், 2025 யூன் மாதம் 30 ஆம் திகதியாகும் போது ரூ.244.647 மில்லியன் வழங்கப்பட்ட கடன் தொடர்பான 297 கோப்புக்கள் காணாமல் போயுள்ளமை குழுவின்போது வெளியானது.

இன்றளவில் இது தொடர்பாக அறிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளதாவும், 264 கோப்புக்கள் காணாமல் போயுள்ளதாகவும் அவற்றில் கடுவளை கிளையில் காணப்பட்ட சுமார் 178 கோப்புகள் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக காணாமல் போயுள்ளதாகவும் குறித்த 264 கோப்புக்களில் 194 கோப்புக்களும் ஆதனக் கடன்கள் (property mortgage loan) மற்றும் வீடமைப்புக் கடன்களாக காணப்படுவதுடன், இவற்றின்

பிணை (security documents மற்றும் mortgage bonds) காணப்படுவதால் கடனை மீள அறவீடு செய்வதில் சிக்கல்கள் ஏற்படாது என்றும், இவற்றில் சுமார் 147 கணக்குகளை வைத்திருப்பவர்கள் உரிய கொடுப்பனவுகளைச் செலுத்துவதாகவும், மேலும், குறிப்பிட்ட சில கிளைகளில் கோப்புக்கள் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளதாகவும், குறித்த ஒவ்வொரு கோப்புகள் தொடர்பான அறவீடுகள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், குறித்த கோப்புக்கள் தொடர்பான தகவல்கள் தற்போது புதிய தகவல் முறைமைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் (migrate) கடுவளை வங்கிக் கிளையினை வேறு இடத்தில் தாபித்துள்ளதாகவும் சிரேஷ்ட பொது முகாமையாளர் தெரிவித்தார்.